# சாதாரண கூட்ட நிகழ்ச்சி நிரல்

**கூடலூர் நகராட்சியில் டிசம்பர் மாதம் (31.12.2021) ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.25 மணிக்கு நகராட்சி அலுவலக நகர் மன்ற கூட்ட அரங்கில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் நிறைவேற்றப்பட்ட மன்ற தீர்மானங்கள்.**

**பொருள்.1**

ஆணையாளர் அவர்களின் 11/2021 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.1276,பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்.2**

நகராட்சி பொறியாளர் அவர்களின் 11/2021 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.1277,பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்.3**

கூடலூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் டெங்கு தடுப்பு நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படும் புகைமருந்து இடிக்கும் இயந்திரமான தெர்மல் Fogging Machine –2 எண்ணம் வாங்கி பல வருடங்கள் ஆனதால் அதனை பழுது நீக்கம் செய்யவேண்டியுள்ளது தற்போதைய சூழ்நிலையில் டெங்கு பரவ வாய்ப்புள்ளதால் மேற்கண்ட புகைமருந்து அடிக்கும் இயந்திரத்தினை பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ27,000/–ற்க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.2431/2021/எச்1)**

**அலுவலகக் குறிப்பு : –** 1. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் எற்க்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் (ம) மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்

**தீர்மான எண்.1278,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.4**

கூடலூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகன எண்கள் TN 60 AV 4020 , TN 60 AV 4052 மற்றும் TN 60 T 6093 ஆகிய வாகனங்களுக்கு ஆண்டு புதுப்பித்தலின் (FC) போது மேற்கொண்ட செலவினமான புகைசான்று செலவு–ரூ 600/–ஒளிருட்டும்ஸ்டிக்கர்–ரூ 4300/– மற்றும் தகுதி சான்று செலவு/–ரூ 1950/– என ஆக மொத்தம் ரூ.6850/– நகராட்சி ஓட்டுநர் திரு.P.விஜயகுமார் செலவு செய்ததாகவும் அதனை தனங்கு வழங்குமாறு கோரியதை தொடர்ந்து மேற்படி செலவினத்தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.2432/2021/எச்.1)**

**அலுவலகக் குறிப்பு :** மேற்கண்ட செலவினத்தை நகராட்சி ஓட்டுநர் திரு.P.விஜயகுமார் அவர்களுக்கு வழங்கலாம்

**தீர்மான எண்.1279,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.5**

கூடலூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் டெங்கு தடுப்பு நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படும் புகைமருந்து அடிக்கும் இயந்திரமான தெர்மல் Fogging Machine –2 எண்ணம் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு 31.12.2021 ஆம் தேதியன்று வரப்பெற்ற கீழ்கண்ட விபரப்படியான விலைப்புள்ளிகள்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது **(ந.க.எண்.2431/2021/எச்1)**

1. B.ஆனந்த கொசு மருந்து, புகைமிஷன முதல் மிஷன்–ரூ.16052

சர்விஸ் கென்டர்,பெரியகுளம் இரண்டாம் மிஷன் –ரூ.10832

2 .கணேஷ் இன்ஜினியரிங்– கோவை முதல் மிஷன் –ரூ.16920

இரண்டாம் மிஷன் –ரூ.11800

3 .பிரைட் எஜென்சீஸ் –கோவை முதல் மிஷன் –ரூ.16500

இரண்டாம் மிஷன் –ரூ.11200

**அலுவலகக் குறிப்பு : –** குறைவான விலைப்புள்ளி அளித்த B.ஆனந்த கொசு மருந்து, புகைமிஷன் சர்விஸ் கென்டர், பெரியகுளம் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றும் ஏற்க்கலாம்

**தீர்மான எண்.1280,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.6**

கூடலூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணியில் மக்கும் குப்பை என தரம் பிரித்து நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் கூடத்தில் ( MCC) கொண்டு சென்று உரம் தயாரிக்கப்படுகிறது,அவ்வாறு பிரித்து கொண்ட செல்லும் போது மேற்படி குப்பையினை எடைபோட்டு கொண்டு செல்ல வேண்டும் எனவே மேற்கண்ட பணியினை மேற்கொள்ள 2 எண்ணம் எடை அளவு கோள்(weight Machine) தேவைபடுவதால் அதனை வாங்கவும் ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.15,000/–ற்க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.2432/2021/எச்.1)**

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.1281,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.7**

கூடலூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணியின் தொடர்ச்சியாக மக்கும் குப்பை மற்றும் மாக்காத குப்பை என பிரித்து TATA ACE வாகனம் மூலம் சேகரிக்கப்படுகிறது ஆனால் பொதுமக்களிடம் போதியஅளவு விழிப்புணர்வு இல்லாத காரணத்தினால் குப்பையை தரம் பிரித்து வாங்குவது இயலாமல் உள்ளது, எனவே பொது மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக நகராட்சியில் உள்ள நான்கு TATA ACE வாகனத்திற்கு விழிப்புணர்வு விளம்பரம் மேற்கோள்ள தேவையான ஒலி பொருக்கி,மைக்,பென்டிரைவர் மற்றும் தேவையான உதிரி பாகங்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ50,000/– ற்க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.2395/2021/எச்.1)**

**அலுவலகக் குறிப்பு : –**

1 . திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் எற்க்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் (ம) மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்

**தீர்மான எண்.1282,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.8**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் மத்திய, மாநில அரசுகளின் உத்திரவின் படி கொரோனா தொற்று பரவாமல் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாபெரும் கொரோனா தடுப்புசி முகாம் வாரம் இருமறை நடைபெறுவதாக அறிவித்ததை தொடர்ந்து பொது மக்களுக்கு முகாம் நடைபெறும் முந்தைய நாள் மற்றும் முகாம் நடைபெறும் நாட்களில் முகாம் நடைபெறும் இடம் குறித்த விபரம் மற்றும் தடுப்புசி தொடர்பான விழிப்புணர்வு விபரங்களை பொது மக்களுக்கு ஒலிபெருக்கி மூலம் அறிவிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் அறிவிறுத்தியதை தொடர்ந்து. மேற்படி விளம்பரத்தினை அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்பட்ட சூழ்நிலையில் ( 09.11.2021&10.11.2021), (13.11.2021 &14.11.2021) (17.11.2021 & 18.11.2021,) (20.11.2021 & 21.11.2021,) (24.11.2021 & 25.11.2021, ) (27.11.2021 &28.11.2021,) (03.12.2021 & 04.12.2021) மற்றும் 05.12.2021, 07.12.2021 மற்றும் 08.12.2021 ஆம் தேதிகளில் நகராட்சி பகுதிதிளில் வரி வசூல் செலுத்த கோரி ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் மேற்கொண்ட வகையில் 10 நாட்களில் மாபெரும் முகாம், விழிப்புணர்வு மற்றும் வரி வசூல் செலுத்த கோரி ஒலிபெருக்கி விளம்பரம்

மேற்கொண்ட வகையில் நாள் ஒன்றிக்கு ரூ.2500/– விதம் **10 நாட்களுக்கு ரூ.25000/–த்தை நகராட்சி ஓட்டுநர் திரு.ப.விஜயகுமார் அவர்கள் மேற்கொண்டதாகவும் அதனை தனக்கு வழங்க கோரியதை தொடர்ந்து. செலவினத்தொகையினை மேற்படி பணியாளருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு,**

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி ஓட்டுநர் திரு.P.விஜயகுமார் அவர்களுக்கு வழங்கலாம்

**தீர்மான எண்.1283,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.9**

கூடலூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணியின் தொடர்ச்சியாக மக்கும் குப்பை மற்றும் மாக்காத குப்பை என பிரித்து TATA ACE வாகனம் மூலம் சேகரிக்கப்படுகிறது ஆனால் பொதுமக்களிடம் போதியஅளவு விழிப்புணர்வு இல்லாத காரணத்தினால் குப்பையை தரம் பிரித்து வாங்குவது இயலாமல் உள்ளது, எனவே பொது மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக நகராட்சியில் உள்ள நான்கு கூஹகூஹ ஹஊநு வாகனத்திற்கு விழிப்புணர்வு விளம்பரம் மேற்கோள்ள தேவையான ஒலி பொருக்கி,மைக், ஆம்ப், யூனிட் மற்றும் தேவையான உதிரி பாகங்கள் வாங்க பணிக்கு 20.12.2021 ஆம் தேதியன்று வரப்பெற்ற கீழ்கண்ட விபரப்படியான விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ.எண் | பொருள் விபரம் | சேகர் செல்வம் ஆடியோஸ் & லைட்ஸ் | M&M Speaker Sales& services |
|---|---|---|---|
| 1 | ஒலி பெருக்கி குழாய் (1 எண்ணம்) | 3000 | 3200 |
| 2 | யூனிட் (1 எண்ணம்) | 2500 | 2800 |
| 3 | ஆம்ப் (1 எண்ணம்) | 4500 | 5000 |
| 4 | மைக் (1 எண்ணம்) | 1200 | 1500 |
| 5 | மைக்வயர் (1 எண்ணம்) | 500 | 500 |
| 6 | வயரிங்வயர் தேவையான அளவு | 300 | 300 |
| 7 | வேலை கூலி (வண்டி ஒன்றிற்கு) | 500 | 500 |

**அலுவலகக் குறிப்பு : –** குறைவான விலைப்புள்ளி அளித்த சேகர் செல்வம் ஆடியோஸ் & லைட்ஸ் – கூடலூர் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்க்கலாம்

**தீர்மான எண்.1284,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.10**

இந்நகராட்சியில் கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு **37 DBC** களப்பணியாளர்கள் முற்றிலும் தற்காலிகமாக **Out Sourcing முறையில்** தேனிமாவட்டஆட்சியர் அவர்களிள் செயல்முறை உத்திரவின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள தினக்கூலியின் அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க கொசுப்புழு ஒழிப்புபணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். இப்பணியினை ஒப்பந்த அடிப்படையில் **CLEAN CARE SERVICE CENTER** மதுரை நிறுவனத்தின் மூலம் தற்சமயம் செயல்பட்டு வருகிறது. இப்ணியானது வருகின்ற 2021 மார்ச் இறுதியில் ஒப்பந்தம் முடிவடையும் நிலையில் உள்ளதால் இப்பணியினை தொடர்ந்து தொய்வில்லாமல் நடைபெற்றால் தான் கொசுபுழுக்களை ஒழித்து டெங்குகாய்ச்சல் பரவாமல் தடுக்க முடியம். மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ஒ.மு.எண்.13433/2018/J1, நாள்.17.09.2018, மற்றும் தேனி மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ந.க.எண்.14770/202/இ2, நாள்.07.09.2020 உத்திரவில் குறிப்பட்டுள்ள வரிசை எண்.32 இல் நாள் ஒன்றுக்கு ஒருவருக்கு தினக்கூலியாக ரூ.249/– நிர்ணயிக்கப்பட்டுள்ள கூலியின்படி ஏற்கனவே பணியில் உள்ள **37 DBC** களப்பணியாளர்களை மட்டும் பணியமர்த்தி பணிகளை மேற்கொள்ள வேண்டி மேற்கண்ட **CLEAN CARE SERVICE CENTER** மதுரை நிறுவனத்திற்கே வழங்கவும் மன்றத்தின் அனுமதிபெற்றதை தொடர்ந்து. மேற்காணும் களப்பணியாளர்களுக்கு மார்ச்/2021 ஆம் மாதம் களப்பணிகள் செய்ய கால அவகாசம் முடிவடைவதால் மேற்படி நிறுவனத்தின் மூலம் ஏற்கனவே ஏப்ரல்/2021 முதல் ஜூன்/2021முடிய, ஜீலை/2021 முதல் செப்டம்பர்/2021 முடிய களப்பணி செய்ய மன்ற அனுமதி பெறப்பட்டதால், மேலும் ஜனவரி/2022 முதல் மார்ச்/2022 முடிய மூன்று மாதங்களுக்கு நீட்டிப்பு செய்ய ஆகும் செலவினம் கீழ்கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு.

**கீழ்க்கண்டவாறு:**

**1)** தேவைப்படும் களப்பணியாளர்கள்எண்ணிக்கை **–37**

**2)** தேனி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைஉத்திரவின்படிதினக்கூலியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளநபர் ஒருவருக்குநாள்ஒன்றுக்கு – ரூ.**249/–**

**3)** நபர் ஒன்றுக்கு **37**DBC களப்பணியாளர்களின் **37**X**249** தினக்கூலிதொகை ரூ.**9213** /–

4) அக்டோபர்/**2021** முதல் டிசம்பர்/**2021** முடிய மூன்று மாதங்களுக்கு கூலியாக **9213**X**90** ரூ.**8,29,170/–**

**5)** தொழிலாளர் சேமநலநிதி (**13.1** 5%) = ரூ**1,09,035/–**

**6)** தொழிலாளர் ESI (4.75%) =ரூ.**39,385/–**

**7)** தொழிலாளர் LIC (50* 37* 3) = ரூ.**5,550/–**

------------

**மொத்தம்** ரூ.**9,83,140/–**

------------

கொசுஒழிப்பு பணிக்காக **37 DBC** பணியாளர்களுக்கு (ஜனவரி/**2022** முதல் மார்ச்/**2022** முடிய) மூன்று மாதங்களுக்கு உண்டாகும் உத்தேச செலவீனம் தொகைரூ.**9,90,000/–** க்கு பொதுசுகாதார அவசர அவசியம் கருதி டெங்கு களப்பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு. (ந.க.எண்.**120/2021**/எச்**1**)

**அலுவலகக்குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரஅவசர அவசியம் கருதியும் மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளின் அவசர அவசியம் கருதியும் (ஜனவரி/2022 முதல் மார்ச்/2022 முடிய) மேலும் மூன்று மாதங்களுக்கு களப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1285,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.11**

கூடலூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணியில் மக்கும்,மக்காத குப்பை என தரம் பிரித்து நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் கூடத்தில் ( MCC) கொண்டு சென்று உரம் தயாரிக்கப்படுகிறது, அவ்வாறு பிரித்து கொண்ட செல்லும் போது மேற்படி குப்பையினை எடைபோட்டு கொண்டு செல்ல வேண்டும், எனவே மேற்கண்ட பணியினை மேற்கொள்ள 2 எண்ணம் எடை அளவுகோள் (weight Machine) வாங்கும் பணிக்கு **28.12.2021** ஆம் தேதியன்று வரப்பெற்ற கீழ்கண்ட விபரப்படியான விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது . (ந.க.எண்.**2432/2021**/எச்**1**)

1. தனலெட்சுமி ஸ்டோர்,தேனி — **1** எண்ணத்தின் விலை–ரூ**7900/–**
2. மதியழகன் ஸ்டோர்ஸ்– தேனி — **1** எண்ணத்தின் விலை–ரூ**7500/–**

**அலுவலகக் குறிப்பு : –** குறைவான விலைப்புள்ளி அளித்த மதியழகன் ஸ்டோர்ஸ்– தேனி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்க்கலாம்

**தீர்மான எண்.1286,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.12**

இந்நகராட்சிக்குச் சொந்தமான அறிஞர் அண்ணா பேரூந்து நிலையத்தினுள் பேரூந்துகள் வந்து செல்வதற்கு உரிமக்கட்டணம் **2021–22, 2022–23** மற்றும் **2023–24** முடிய மூன்றாண்டு கால ஆண்டுக் குத்தகை இனத்திற்கு வசூல் செய்யும் பொருட்டு **08.12.2021**ஆம் தேதியன்று **15**வது ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொதுஏலம் கோரப்பட்டது. அதன்படி, ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டு ஒப்பந்ததாரர்கள் கொடுத்துள்ளார்கள். ஏலம் கோர எவரும் முன் வரவில்லை. மேலும், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.**2005/2020**/அ**1**)

| வ.எ | பெயர் | முகவரி | ஒப்பந்தப்புள்ளி | ஏலம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.போ. பிரபாகரன் | த/பெ போஸ், வார்டு எண்.1, கதவு எண்.4B, மந்தையம்மன்கோவில் தெரு, கூடலூர். | 2021–22ம் ஆண்டிற்கு ரூ.1,60,000/– | கோரவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | திரு.ரா.அய்யப்பன் | த/பெ ராமசாமி, வார்டு எண்,16, கதவு எண்.39J, முத்துச்சாமி அய்யர் தெரு, கூடலூர். | 2021–22ம் ஆண்டிற்கு ரூ.2,01,300/– | கோரவில்லை |

அலுவலக் குறிப்பு :- 1 வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் திரு.ரா.அய்யப்பன், த/பெ ராமசாமி என்பவர் கடந்த 2019–2020ஆம் ஆண்டில் கோரப்பட்ட ஏலத்தொகை ரூ.2,00,500/–யைக் காட்டிலும், ரூ.2,01,300/–ற்கு கூடுதலாக ரூ.800/– ஒப்பந்தப்புள்ளிக் கொடுத்துள்ளார்.

2 மேலும், கடந்த 16.04.2021 முதல் நகராட்சிப் பணியாளர்களைக் கொண்டு, சுழற்சி முறையில் இரண்டு பணியாளர்கள் துறை ரீதியான வசூல் செய்யப்படும் பொழுது பணியாளர்களின் ஊதியம், இதர படிகள் மற்றும் ரசீது அச்சடிக்கும் செலவினங்களைக் கொண்டு கணக்கிடும்போது நிர்வாத்திற்கு கூடுதல் செலவினம் ஏற்படுவதால் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்.1287,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.13**

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்துார்,இயக்குநர் அவர்களது கடித ந.க.எண்.276/2020/A3 நாள்.08.12.2021 கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு கூடலூர் நகராட்சியின் பங்களிப்பு தொகை 2021-2022 ஆம் ஆண்டிற்கு ரூ.30,000/- (ரூபாய் முப்பது ஆயிரம் மட்டும்) தமிழ்நாடு நகரியில் பயிற்சி நிறுவனம் கோயம்புத்துார் அவர்களுக்கு செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி செலவினம் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.1288,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.14**

சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் திரு.ப.சுரேஷ் என்பவரால் வழக்கு எண்.WP(MD)No.330./2020 வழக்கு தொடரப்பட்டது.இவ்வழக்கில் இந்நகராட்சியின் சார்பாக ஆஜாராகிய வகையில் வழக்கறிஞர் கட்டணம் ரூ.9500/-(ரூபாய் ஒன்பதாயிரத்து ஐந்து நூற்று மட்டும்) திரு.கே.பி.கிருஷ்ணதாஸ்.,M.Sc ML., அரசு வழக்கறிஞர்.சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளை,மதுரை அவர்களுக்கு செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி செலவினம் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.1289,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.15**

இந்நகராட்சி அலுவலக உபயோகத்தில் இருந்து வரும்5பொலேரோ ஈப்பு வாகனம் எண் TN-60 R-6378ற்கு ஆயில் சர்வீஸ் மற்றும் சிறுபழுதுகள் நீக்கம் செய்ய 26.11.2021 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகல் மன்றத்தின் முடிவிற்கும்.

| வ.எண் | பெயர்(ம)முகவரி | தொகை(ரூ.) |
|---|---|---|
| 1. | அகரம் மோட்டார்ஸ் -கம்பம் | ரூ.27,284/– |
| 2. | நவின் ஆட்டோ ஒர்க்ஸ் -கம்பம் | ரூ.28,695/- |
| 3. | B.S.P மோட்டார்ஸ் -கம்பம் | ரூ.29,650/- |

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள அகரம் மோட்டார்ஸ் கம்பம் விலைப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை செய்ததையும் அதற்கான பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1290,அனுமதிக்கப்பட்டது**

பொருள்.16

கூடலூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் வார்டு எண்–5 மற்றும் வார்டுஎண்–7 –இல் இயங்கிவரும் மூன்று நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் கூடத்தில் ( MCC) மக்கும் குப்பையை அறைத்து உரம் தயாரிக்க EM கரைசல் சேர்த்து உரத் தொட்டியில் போடப்படும் அவ்வாறு தொட்டியில் போடும் போது நெல்உம்மி மற்றும் தவிடு சேர்த்து உரத் தொட்டியில் போடவேண்டும்.எனவே மேற்படி மூன்று நுண்ணுயிர் உரம் தயாரிக்க தேவையான நெல்உம்மி மற்றும் தவிடு போன்றவற்றை தேவையான அளவு வாங்கவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ஆண்டிற்கு ரூ.2,00,000–றக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2398/2021/எச்.1)

**அலுவலகக் குறிப்பு : 1.** திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி உரம் தயாரிக்க தேவையான நெல் உம்மி மற்றும் தவிடு போன்றவற்றை அன்றைய விலை நிலவரப்படி தேவைக்கு ஏற்ப வாங்க மன்றம் தீர்மானிக்கலாம்

**தீர்மான எண்.1291,அனுமதிக்கப்பட்டது**

பொருள்.17

கூடலூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் உலகளவில் மிகவும் வேகமாக பரவி வரும் கொரோனா தொற்றின் மூன்றாம் அலையான ஒமைக்ரான் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பல்வேறுகட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சூழ்நிலையில் மேற்கண்ட தடுப்புபணியில் ஈடுபடும் முன்களபணியாளர்களுக்கு தேவையான கீழ்கண்ட விபரம்படி பொருட்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ1,20,000/– ற்க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2396/2021/எச்.1)

| | தேவையான பொருட்கள் |
|---|---|
| 1 | கையுறை – 1000 செட் |
| 2 | மாஸ்க் – 2000 எண்ணம் |
| 3 | சானிடைசர் – 200 லிட்டர் |

**அலுவலகக் குறிப்பு : –** 1. பொதுசுகாதாரத்தில் அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் எற்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் (ம) மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்

**தீர்மான எண்.1292,அனுமதிக்கப்பட்டது**

பொருள்.18

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட குமுளி பேருந்து நிலையத்தில சபரிமலை செல்லும் ஐய்யப்ப பக்தர்களுக்கு தேவையான கழிப்பறைகள்வசதி,குடிநிர்வசதி மற்றும் எச்சரிக்கை விழிப்புணர்வு பேனர்கள் அனைத்தும் நமது நகராட்சியின் சார்பாக செய்து தரும்படி வருவாய் கோட்டாச்சியர் உத்தமபாளையம், அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் அறிவிறுத்தியதை தொடர்ந்து மேற்படி பணிகள் மேற்கொள்ளள ஆகும் உத்தேச செலவினம் ரூ-75000./–ற்க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2/2021/எச்.1)

**அலுவலகக் குறிப்பு : 1.** திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி உரம் தயாரிக்க தேவையான நெல் உம்மி மற்றும் தவிடு போன்றவற்றை அன்றைய விலை நிலவரப்படி தேவைக்கு ஏற்ப வாங்க மன்றம் தீர்மானிக்கலாம்

**தீர்மான எண்.1293,அனுமதிக்கப்பட்டது**

பொருள்.19

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளில் பொது சுகாதார பணிகள் மேற்கொள்ள தேவையான கிருமிநாசினியான சுண்ணாம்பு தூள் தற்போது போதிய அளவு இருப்பு இல்லாததால் அதனை வாங்கவும் மேலும் பொது சுகாதாரபணிக்கு தேவையான தளவாட சாமான்கள் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும் கீழ்கண்ட விபரம்படி பொருட்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ2,40,000/– ற்க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2397/2021/எச்.1)

| | தேவையான பொருட்கள் |
|---|---|
| 1 | சுண்ணாம்புதூள் – 5000 கிலோ |
| 2 | மண்வெட்டி – 30 எண்ணம் |
| 3 | சாக்கடை கரண்டி – 50 எண்ணம் |
| 4 | மண்தள்ளும் பிரஸ – 50எண்ணம் |
| 5 | கையோடு – 200 எண்ணம் |
| 6 | குப்பைஅள்ளும் தட்டு – 50 எண்ணம் |
| 7 | கூட்டுமார் –50 எண்ணம் |

**அலுவலகக் குறிப்பு : –** 1. பொதுசுகாதாரத்தில் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.
2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் (ம) மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்

**தீர்மான எண்.1294,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.20**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பொதுசுகாதார பணிகளுக்கு பொது இடங்களில் கிருமிநாசினம் செய்வதற்க்கு தேவையான கிருமிநாசினிகள் போதுமான அளவு இருப்பு இல்லை இதனால் தினமும் பொது இடங்களிலும், கழிப்பிடங்களிலும் கிருமிநாசினம் செய்வது போன்ற அத்தியாவசிய பணிகளை செயல்படுத்திட கீழ்கண்ட விபரப்படியான பொருட்கள் தேவைபடுவதால், அதனைவாங்கி வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. அதற்கான உத்தேச செலவினம் ரூ.4,00,000/– த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | Black Phenyl 50 Litres Cane | 500 Ltr |
| 2 | Lemon Grass Flavour Soap Oil | 500 Ltr |
| 3 | Hydrated Lime Powder-50 Kg bag | 10000 Kg |
| 4 | Chlorine 34%-25Kg bag bleaching powder | 5000 Kg |

**அலுவலகக் குறிப்பு : –** 1.மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் (ம) மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்

**தீர்மான எண்.1295,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.21**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கிவரும் வாகனஎண் TN 60 AY 3850 என்ற ஈச்சர் லாரியில் கீழ்கண்ட விபரப் படியான பழுதுகள் எற்பட்டுள்ளதால் மேற்படி வானகனத்தை இயக்க முடியவில்லை அதனால் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்வதில் மிகவும் சிரமம் ஏற்படுகிறது எனவே கீழ்கண்ட விபரப் படியான பழுதுகளை சரி செய்ய ஆகும் உத்தேச செவவினம் ரூ.52,000/– ற்க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

| | |
|---|---|
| 1. | டிரிப்பிங் ஆயில் புதியது மாற்றுதல். |
| 2. | டிரிப்பிங் ஓஸ் கிளிப் மற்றும் ஓஸ் மாற்றுதல். |
| 3. | டீரிப்பிங் பிரசர் வால்வு , குட்டி சாய்ண்டு சர்விஸ் செய்து மாற்றுதல். |
| 4. | தொட்டியில் பட்டை (சேஸ்ராடு) கிராக்கை கட் செய்து புதியது மாற்றுதல் |
| 5. | ஜாக்கி பெட் புதியது மாற்றுதல். |
| 6. | ஏன்ஜின் ஆயில்,ஆயில் பில்டர்,டீசல் பில்டர் புதியது மாற்றுதல். |

**அலுவலகக் குறிப்பு : –** 1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் (ம) மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலா

**தீர்மான எண்.1296,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.22**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் தற்போது அதிவேகமாக பரவிவரும் கொரோனா மூன்றாம் அலையின் தாக்கத்தை கட்டுப்படுத்தும் விதமாக பல்வேறு மன்னெச்சரிக்கை நடடிக்கை மேற்கொள்ளும் விதமாக Power Sparyar மூலம் கிருமிநாசினியான லைசால் தெளிப்பதற்க்கு ஏற்கனவே 1 எண்ணம் உள்ளதை நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் பயன்படுத்த முடியாததால் தற்போது புதிதாக 1 எண்ணம் Power Sparyar வாங்க ஆகும் உத்தேச செவவினம் ரூ.40,000/– ற்க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : –** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்

**தீர்மான எண்.1297,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.23**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா தடுப்புபணிகளான,பொது இடங்களில் கிருமிநாசினம் செய்வதற்க்கு தேவையான லைசால் மற்றும் கொரோனா தடுப்பு பணியில் ஈடுபடும் முன்கள பணியாளகளுக்கு பாதுகாப்பு நடவடிக்கைக்கு தேவையான பாதுகாப்பு உபகரணம் போதுமான அளவு இருப்பு இல்லாதததல் கொரோனா தடுப்பு பணிகள் மேற்கொள்ள, கீழ்கண்ட விபரப்படியான பொருட்கள் தேவைபடுவதால், அதனைவாங்கி வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. அதற்கான உத்தேச செலவினம் ரூ.5,00,000/—த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| Hand Wash Liquid | 500 Ltr |
| Covid 19 -Biomedical Waste Yellow Bag - Big | 200 Nos |
| Face Mask -Ffp 1 | 10000 Nos |
| Lysol Cented (Surface Cleaner) | 500 Ltr |
| Hand Sanitizer | 100 Ltr |
| PPE - Kit full set (coat,gloves,goggles,mask & cap) | 500 Nos |
| Face Mask K-N95 | 300 Nos |
| Sprayers(12 Lit Capacity) | 3 Nos |

**அலுவலகக் குறிப்பு : —** 1.மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் (ம) மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்

**தீர்மான எண்.1298,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.24**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணியினை தொடந்து செயல்படுத்துவதற்க்கு தேவையான தளவாட பொருட்கள் போதுமான அளவு இருப்பு இல்லை தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணியினை தொடந்து செயல்படுத்துவது மிகவும் சிரமம் ஏற்படுகிறது எனவே கீழ்கண்ட விபரப்படியான பொருட்கள் தேவைபடுவதால், அதனைவாங்கி வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. அதற்கான உத்தேச செலவினம் ரூ.2,50,000/—த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | Reflector Jacket | 100 Nos |
| 2 | Cocunut Broom Stick | 100 Nos |
| 3 | Cocunut Bamboo Milar | 100 Nos |
| 4 | Canal Spoon Grip | 100 Nos |
| 5 | Large Fork With Fork Handle | 100 Nos |
| 6 | Aluminium Basket | 100 Nos |
| 7 | Garbage Disposal Plate | 200 Nos |
| 8 | Cotton Hand Gloves | 1500 Nos(Set) |

**அலுவலகக் குறிப்பு : —** 1.மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் (ம) மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்

**தீர்மான எண்.1299,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.25**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு வார்டு எண் 1 முதல் 21 வரை உள்ள தெருக்களில் மத்திய, மாநில அரசுகளின் உத்திரவின் படி கொரோனா தொற்று பரவாமல் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாபெரும் கொரோனா தடுப்புசி முகாம் நடைபெறுவதாக அறிவித்ததை தொடர்ந்து பொது மக்களுக்கு முகாம் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தவும் , நகராட்சி பகுதிகளில் வரி வசூல் செலுத்த கோரி ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு அறிவிப்பு விளம்பரம் மேற்கொள்ள நாள் ஒன்றிக்கு ரூ.1500/— விதம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக் குறிப்பு :** 1. பொதுசுகாதாரத்தில் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் எற்க்கலாம்.
. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் (ம) மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்

**தீர்மான எண்.1300,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.26**

கூடலூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் வார்டு எண்.10 பெத்துகுளத்தில் அமைந்துள்ள உரக்கிடங்கில் கொ தற்போது குப்பைகள் நிறைந்துள்ளது, அதனால் பொது சுகாதார பிரிவு வாகனங்கள் குப்பைகள் கொட்டுவதில் மிகவும் ஏற்படுவதுடன்,மேற்படி வாகனம் குப்பையில் மாட்டிக் கொள்வதால் சுகாதார பணிகள் மேற்கொள்வதில் தாமதம் ஏற்படுவதுடன்,திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்வதில் பாதிப்பு ஏற்படுகிறது, எனவே மேற்கண்ட குப்பைகளை JCB வாகனம் மூலம் அப்புறப்படுத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.75,000/—த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : –** 1 .மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் (ம) மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலா

**தீர்மான எண்.1301,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.27**

கூடலூர் நகராட்சியில் வார்டு எண்-06,07,மற்றும் 20ல் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கினறுடன் கூடிய சிறுமின்விசை பம்புகள் மற்றும் வார்டு எண்.3 மற்றும் 8ல் உள்ள பெண்கள் இலவச கழிவறையில் உள்ள மின் மோட்டார்கள்,ஸ்டார்ட்டர்கள் ஆகியவற்றினை புதியதாக மாற்றுவதற்கும் அதற்காக ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,45,000/-க்கு தயார் செய்யபட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு

**<u>அலுவலகக் குறிப்பு</u> :**
1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.1302,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.28**

கூடலூர் நகராட்சியில் வார்டு எண்-21, லோயர் கேம்பில் உள்ள அம்பேத்கார் காலளியில் உள்ள மூன்று குறுக்கு தெருக்களில் மழைநீர் வடிகால் அமைக்கும் போது சேதமடைந்த பகிர்மான குழாயினை புதிதாக அமைக்க ரூ.1.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு

**<u>அலுவலகக் குறிப்பு</u> :**
1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.1303,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.29**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்குடெங்கு தடுப்பு பணிக்கு தேவையான கொசு புழுவான நார்வா ஒழிக்கும் பணிக்கு தேவையான மருந்து அபேட் ( Temephos Emulsifiable 50% EC) மற்றும் டெங்கு கொசு ஒழிக்கும் பணிக்கு புகைமருந்து அடிக்கும் இயந்திரம் மூலம் டீசலில் கலந்து அடிக்கும் பணிக்கு தேவையான மருந்து பைரத்தம் (Pyrethrum 2% Extract) போன்றவை நகராட்சியில் போதிய அளவு இருப்பு இல்லாத காரணத்தினால், கீழ்கண்ட விபரப்படியான மருந்து தேவைபடுவதால், அதனை வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/– மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | Mosquito Larvicide Temephos 50% EC ARATE | 170 Ltr |
| 2 | Fogging Chemical Pyrethrum 2% extract | 350 Ltr |

**அலுவலகக் குறிப்பு : –** 1 .மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் (ம) மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்

**தீர்மான எண்.1304,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.30**

கூடலூர் நகராட்சியில் நகராட்சி அலுவலகத்தில் பொறியியல் பிரிவில் உள்ள ஒளி நகல் இயந்திரத்திற்கு (**XEROX MACHINE RICOH MP 2501L**) தேவையான உதிரி பாகங்கள் பொருத்தி பராமரிப்பு மற்றும் பழுதுநீக்கம் பணிகள் HP LASERJET PRINTER MACHINE 1020ஐ ) தேவையான உதிரி பாகங்கள் பொருத்தி பழுது நீக்கம் செய்யும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.1269

நாள்.30.11.2021ல் அனுமதிக்கப்பட்டதன்படி மேற்படி பணியினை மேற்கொள்ள 08.12.2021ம் நாள் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கு.

| வ.எண் | வேலை விபரம் | விலைபுள்ளி தொகை | | |
|---|---|---|---|---|
| | | **STAR OFFICE SOLUTION** | **SHAZ COPIER CARE** | **CI - CAMTECH** |
| 1. | கூடலூர் நகராட்சியில் நகராட்சி அலுவலகத்தில் பொறியியல் பிரிவில் உள்ள ஒளி நகல் இயந்திரத்திற்கு (**XEROX MACHINE RICOH MP 2501L**) தேவையான உதிரி பாகங்கள் பொருத்தி பராமரிப்பு மற்றும் பழுதுநீக்கம் செய்யும் பணி | ரூ.14,050/- | ரூ.16,050/- | ரூ.15,300/- |
| | HP LASERJET PRINTER MACHINE 1020ஐ தேவையான உதிரி பாகங்கள் பொருத்தி பழுது நீக்கம் சரி செய்யும் பணி | ரூ.3,500/- | ரூ.3,650/- | ரூ.3,950/- |

**அலுவலகக் குறிப்பு : –**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ஒளி நகல் இயந்திரத்திற்கு ரூ.14,050/--க்கும், HP LASERJET PRINTER MACHINE 1020 பிரின்டருக்கு ரூ.3,500/--க்கும், குறைந்த விலைபுள்ளி கொடுத்துள்ள **STAR OFFICE SOLUTION** நிறுவனத்தரின் விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1305,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.31**

கூடலூர் நகராட்சி அலுவலகத்தில் பொறியியல் பிரிவில் உள்ள கனிணிகளுக்கும் , ஆணையாளர் அறையில் உள்ள கனிணிகளுக்குரிய **3 KVA UPS** மற்றும் **5 KVA UPS** பழுதினை வேவையான உதிரி பாகங்கள் பொருத்தி சரி செய்து மின் கலன்களை பராமரிப்பு செய்திடும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண். 1270 நாள்.30.11.2021ல் அனுமதிக்கப்பட்டதன்படி மேற்படி பணியினை மேற்கொள்ள 01.12.2021 ஆம் நாள் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கு.

| வ.எண் | வேலை விபரம் | விலைபுள்ளி தொகை | | |
|---|---|---|---|---|
| | | **UNITEK POWER SYSTEM MADURAI** | **Sun Line Power Systems MADURAI** | **BALASAKTHI TRADERS** |
| 1. | கூடலூர் நகராட்சி அலுவலகத்தில் பொறியியல் பிரிவில் உள்ள கனிணிகளுக்குரிய 5 KVA UPS பழுதினை சரி செய்து மின் கலன்களை பராமரிப்பு செய்தல். | ரூ.40,710/- | ரூ.43,660/- | ரூ.46,020/- |
| 2 | 3 KVA UPS பழுதினை சரி செய்து மின் கலன்களை பராமரிப்பு செய்தல். | ரூ.23,010/- | ரூ.25,370/- | ரூ.28,320/- |

**அலுவலகக் குறிப்பு: –**

வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் **5 KVA UPS** பழுதினை சரி செய்து மின் கலன்களை பராமரிப்பு செய்தல் பணிக்கு .ரூ.**40,710**/-க்கும்,**3 KVA UPS** பழுதினை சரி செய்து மின் கலன்களை பராமரிப்பு செய்தல் பணிக்கு .ரூ.**23,010**/-க்கும், ஆக குறைந்த விலைபுள்ளி கொடுத்துள்ள UNITEK POWER SYSTEM, MADURAI அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.1306,அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள்.32**

கூடலூர் நகராட்சி வார்டு எண்-21ல் உள்ள கேரள மாநில எல்லை பகுதியான குமுளியில் காவல்துறை சோதனை சாவடி முதல் கேரள மாநில எல்லை பகுதியில் உள்ள சோதனை சாவடி வரை தெருவிளக்குகள் அமைப்பதற்கு தேவையான மின் உபாகரணங்கள் விநியோகம் செய்திடும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண். 1273 நாள்.30.11.2021ல் அனுமதிக்கப்பட்டதன்படி மேற்படி பணியினை மேற்கொள்ள 07.12.2021 ஆம் நாள் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரப்பெற்ற

விலைப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கு.

| வ.எண் | பொருட்கள் விபரம் | விலைபுள்ளி தொகை (ரூபாயில்) | | |
|---|---|---|---|---|
| | | **KMPL Electricals Cumbum** | **RR Electricals Cumbum** | **Thiru.L.Rajendran. Cumbum** |
| 1. | 40 வாட்ஸ் பிட்டிங்-1க்கு | 1580 | 1640 | 1495 |
| 2 | 4 sq mm 2 Core, அலுமினிய வயர் காயில்-1க்கு | 1950 | 2100 | 1800 |
| 3 | 7/20 GI வயர் - ஒரு கிலோவுக்கு | 170 | 230 | 150 |
| 4 | 5 GI பிளக் -1க்கு | 180 | 200 | 170 |
| 5 | 7/20 பிலக்ஸ் வயர் காயில்-1க்கு | 2450 | 2550 | 2300 |

**அலுவலகக் குறிப்பு: –**

1.வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைபுள்ளி கொடுத்துள்ள திரு.எல்.ராஜேந்திரன், கம்பம், அவர்களின் அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2.மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1307,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.33**

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.**1274** நாள்.**30.11.2021** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **07.12.2021** ஆம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கு

| வ. எ ண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத் தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூர் நகராட்சி வார்டு எண் –21 குமுளியின் வழியாக கேரள மாநிலத்தில் உள்ள அய்யப்பன் கோவிலுக்கு செல்லும் பக்த்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான குமுளியில் உள்ள தற்காலிக கழிவறை மற்றும் குடிநீர் உபயோகத்திற்கும் தேவையான தண்ணீர் விநியோகம் செய்வதற்கும் மற்றும் லோயர் கேம்ப் பகுதியில் பக்தர்கள் தங்குவதற்கு தற்காலிக தகர செட் மற்றும் தற்காலிக சிறுநீர் கழிவறைகள் அமைக்கும் பணி | 2.50 | திரு.பி.முருகன் | 2.00% | – |
| | | | திரு.அ.தெய்வேந்திரன் | – | 3.00% |

**அலுவலகக் குறிப்பு : –** 1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 2.00% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள **திரு.பி.முருகன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்

**112.** மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1308,அங்கீகரிக்கப்பட்டது**

பொருள்.34

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அறிவுரையின்படி, கூடலூர் நகராட்சியில் அனைத்து வார்டுகளிலும் உள்ள கழிவறைகள் குறித்த வரைப்படம் , நுண் உரக்குடில்கள் பயன்பாட்டு விபரம் குறித்த வரைபடம் , குடிநீர் விநியோகம் மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் விபரம் குறித்த வரைபடம் மற்றும் நகராட்சி வரைப்படத்தில் நுண்உரக்குடில்களை குறித்து AUTO CADDல் வரைப்படங்கள் தயார் செய்து A-0 அளவில் இரண்டு பிரதிகளாக கலர் பிரிண்டுகளில் தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. மேற்படி வரைபடங்கள் தயார் செய்வதற்கு உண்டான செலவினம் ரூ.42,000/-ஐ மேற்கொண்ட இந்நகராட்சி பொது பணி மேற்பார்வையாளர் திரு.பி.முருகன் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு

**<u>அலுவலகக் குறிப்பு</u> :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.1309,அனுமதிக்கப்பட்டது**

பொருள்.35

கூடலூர் நகராட்சியில் நடைபெறும் திட்டப்பணிகள் குறித்த மின்னனு ஒப்பந்தப்புள்ளிகளை தமிழ்நாடு அரசின் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்திடவும் மற்றும் வலைத்தளத்தின் மூலம் வரப்பெற்ற மின்னனு ஒப்பந்தப்புள்ளிகளை திறப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும் தேவையான இந்நகராட்சி பொது பணி மேற்பார்வையாளர் திரு.பி.முருகன் அவர்களுக்கு உரிய DSC E-Token–ஐ புதுப்பிப்பதற்கு உண்டான செலவினம் ரூ.3,000/-ஐ மேற்கொண்ட இந்நகராட்சி பொது பணி மேற்பார்வையாளர் திரு.பி.முருகன் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு

**<u>அலுவலகக் குறிப்பு</u> :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.1310,அனுமதிக்கப்பட்டது**

பொருள்.36

கூடலூர் நகராட்சியில் கீழ்கண்ட விபரப்படி உள்ள செலவினங்கள் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு-15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் செலவின விபரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| பிரிவு 15ன் பதிவேட்டின் வ.எண் | விபரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 85 | 12நகராட்சி பகுதியில் விநியோகம் செய்யப்படும் குடிநீர் லோயர்கேம்பில் உன்ன தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து வரும் 450mm Dia Gravity பிரதான குழாய் உடைப்பு சரி செய்யப்பட்டது. | 3,35,232 |
| 86 | பொறியியல் பிரிவில் கொரோனா வைரஸ் பரவுதல் தடுப்பு நடவடிக்கை பணி மேற்கொள்ள கேரளவிலிருந்து வரும் மக்களுக்கு பரிசோதனை செய்வதற்கு சுகாதார துறை அலுவலர்கள் முகாமிட்டுள்ள இரண்டு இடங்களில் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட சின்டெக்ஸ் தொட்டிகள் வைக்கப்பட்டது. | 3,47,500 |
| 87 | கூடலூர் நகராட்சி கேரள மாநில எல்லை பகுதியின் எல்லை வழியாக அய்யப்பன் கோவிலுக்கு செல்லும் பக்தர்களுக்கு குமுளி சோதனை சாவடி முதல் கேரள மாநில எல்லையில்லுள்ள சோதனை சாவடி வரை மின் விளக்குகள் அமைத்தல். | 74,450 |
| 88 | இந்நகராட்சியில் உள்ள கேரள மாநில எல்லை பகுதியின் எல்லை வழியாக அய்யப்பன் கோவிலுக்கு செல்லும் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் மற்றும் புதிய பேருந்து நிலையம் உள்ளே வர்ணம் பூசுதல் போன்ற அடிப்படை வசதிகள் செய்யப்பட்டது. | 2,98,522 |
| 89 | பொதுசுகாதாரப்பிரிவிற்கு கொரோனா வைரஸ் பரவுதல் தடுப்பு பணிக்காக லைசால் , சுண்ணாம்புதுாள், பிளிச்சிங் பவுடர் வாங்கியது. | 4,11,500 |
| 90 | பொதுசுகாதாரப்பிரிவிற்கு கொரோனா வைரஸ் பரவுதல் தடுப்பு பணிக்காக கையுறை மாஸ்க் ,சானி டைசர்,கபசுர குடிநீர் ஸ்பிரேயர் வாங்கியது. | 4,16,400 |
| 91 | 12நகராட்சி பகுதியில் விநியோகம் செய்யப்படும் குடிநீர் லோயர்கேம்பில் உன்ன தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து வரும் 450mm Dia Gravity பிரதான குழாய் உடைப்பு சரி செய்து புதிதாக சுலுாயுஸ் வால்வு பொருத்தும் பணி செய்யப்பட்டது. | 77,063 |
| 92 | பொதுசுகாதாரப்பிரிவிற்கு கொரோனா வைரஸ் பரவுதல் தடுப்பு பணிக்காக லைசால் 1500 லிட்டர் பிளிச்சிங் பவுடர் 3000 கிலோ சுண்ணாம்புதூள் 5000 கிலோ,கையுறை 1000 எண்ணம் , PPE KIT 200 எண்ணங்கள் வாங்கியது. | 10,87620 |

| | | |
|---|---|---|
| 93 | பொதுசுகாதாரப்பிரிவிற்கு கொரோனா வைரஸ் பரவுதல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மற்றும் வடகிழக்கு பருவமழை காரணமாக கால்வாயினை துார்வரும் பணிகளுக்கு ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்த வகையில். | 32,200 |
| 94 | இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு கொரோனா வைரஸ் பரவுதல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் வகையில் ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்தல். | 20,450 |
| 95 | இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு கொரோனா வைரஸ் பரவுதல் தடுக்க தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்திரவின்படி 29.10.2021 அன்று கலை நிகழ்ச்சி நடத்தியது. | 13,750 |
| 96 | சட்டமன்ற தேர்தலை முன்னி.டு வாக்குச்சாவடி மையங்களில் சாய்வு தளம் அமைத்து தேர்தல் நாளன்று வாக்குச்சாவடி மையங்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுத்த வகையில் செலவு | 94,000 |
| 97 | சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.20980/2021/எச்2 நாள்.16.09.2021ன்படி நகராட்சி பகுதியில் உள்ள ஓடைகளில் தூர்வாரிய வகையில் | 9,21,200 |
| 98 | சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.20980/2021/எச்2 நாள்.16.09.2021ன்படி நகராட்சி பகுதியில் உள்ள ஓடைகளில் தூர்வாரிய வகையில் | 1,61,206 |

**அலுவலகக் குறிப்பு.**

மன்றம் பதிவுசெய்யலாம்.

**தீர்மான எண்.1311,பதிவு செய்யப்பட்டது.**